# கலை, பண்பாடு ஒரு தேசிய இனத்தின் முதுகெலும்பு

## - மாத்தயா உரை


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | புரட்டாதி 27 | இதழ்: 244
யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | 13-10-1991


(யாழ்ப்பாணம்)
"எழுத்தாளர்கள் உண்மையை உண்மையாகவும், இருப்பதை இருப்பதாகவும் எடுத்துக் காட்டுவதோடு, விடு தலைப்போராட்டத்திலும் பங்கு பற்ற வேண்டும்." இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணித்

(2-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அச்சுறுத்தல் பெருமளவில் இருக்கும்

(கொழும்பு)
இலங்கை அரசுக்கு அறிவித்து வரும் வருடங்களில் விடுதலைப் புலிகள் பெரும் அச்சுறுத்தலாக இருப்பார்களென கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.
புலிகளுக்கு இலங்கை, இந்திய அரசுகள் இராணுவ ரீதி

(4-ம் பக்கம் பார்க்க)

## தீவுப் பகுதியில் பலர் கைது

(யாழ்ப்பாணம்)
நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களுக்குச் செல்லும் படகுச்சேவைகள் தற்போது நிறுத்தப்பட்

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ வடக்கு - கிழக்கில்

# யுத்தம் விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்

## ஜனாதிபதி பிரேமா உரை

(கொழும்பு)
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் யுத்தம் விரைவில் ஒரு முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

மணலாறு இராணுவ முகாமில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு இராணுவத்தினர் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்குபேசுகையில் கூறியதாவது:

நீண்டதொரு யுத்தத்தில் எமது படையினரை இடர்பட விடமாட்டேன். நாட்டை

(4-ம் பக்கம் பார்க்க)

## சுப்றீம் கோட் முடிவு விரைவில்

(கொழும்பு)
சபாநாயகர் முகமட்டிற்கு எதிராக "வழக்கறிஞர்கள் சங்கம்" சுப்ரீம் கோட்டில் தாக்கல் செய்த வழக்கை விசாரணைக்கு எடுப்பதா இல்லையா என சுப்ரீம் கோட் விரைவில் முடிவு செய்யவுள்ளதாம்:

ஒரு கண்டனத் தீர்மானத்தைச் சபையில் விவாதிக்க ஏற்றுக்கொண்ட பின் அதை விவாதிப்பதற்கு முன்பாக நிராகரிக்கும் அதிகாரம் அரசியல் சட்டரீதியாகச் சபா

(4-ம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை இம்மாதத்துள் மீண்டும் வரும்

(கொழும்பு)
இலங்கை அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை இம் மாதத்திற்குள் மீண்டும் சபைக்குக் கொண்டுவர எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சபாநாயகர் பதவிவிலகும் வரை தமது போராட்டம் தொடருமென எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் சபாநாயகர் முகமட் ராஜினாமா செய்தால் மீண்டும் சபாநாயகரை தெரிவு செய்ய இரகசிய வாக்கெடுப்பு நடாத்தவேண்டிவருமெனவும்

(4-ம் பக்கம் பார்க்க)

## 'கறுப்பு பூனைகள்' இலங்கை வரும்

(புதுடில்லி)
சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியப் பிரதமர் திரு. பி. வி நரசிம்மராவ் கொழும்பு வரும்போது அவருக்கு பாதுகாப்பாக பெருமளவு 'கறுப்பு பூனைகள்' கொழும்பு வரவுள்ளனராம்.

தற்போது திரு நரசிம்மராவுக்கு வழங்கப்படும் கறுப்பு பூனைகளின் பாதுகாப்பைவிட

(4-ம் பக்கம் பார்க்க)

## சோனியா மறுப்பு

(புதுடில்லி)
அமெதித்தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட திருமதி சோனியாகாந்தி மறுத்துவிட்டதாக பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார் (மா)

## 2000 படையினர் பலி 10,000 சிப்பாய்கள் காயம்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் கடந்த ஒன்றேகால் வருடத்தில் 2000 படையினர் கொல்லப்பட்டும் 10,000 படையினர் படுகாயமடைந்துமுள்ளனர்.

இந்த மதிப்பீட்டை முன்னாள் 'விமானப்படைத் தளபதி' தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## நாளை தபால்விநியோகம்

(யாழ்ப்பாணம்)
குமாரி கப்பலில் 135 தபால் பொதிகள் வந்துள்ளன. வெளிநாட்டு, உள்நாட்டு தபால்விநியோகம் நாளைநடைபெறவுள்ளது. (வி)

## லலித் காமினிக்கு உயிராபத்து

### பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)
ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவை சேர்ந்த திரு. லலித் அத்துலத்முதலிக்கும், திரு. காமினி திஸநாயக்காவிற்கும் உயிராபத்து ஏற்படலாமென்றும் எச்சரிக்கையாக இருக்குமாறும் பாதுகாப்பு அமைச்சு அவர்களை எச்சரித்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## சபாநாயகர் மீது புதிய குற்றச்சாட்டு

(கொழும்பு)
ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு ஆரம்பகர்த்தா சபாநாயகர் முகமட்டே என அதிருப்தியாளர் தரப்பு எம். பி. ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒரு கட்டத்தில் இந்தக் குற்றப் பிரேரணையில் தாமும் கைபெழுத்திடவுள்ளதாக சபாநாயகர் முகமட் தெரிவித்ததாகவும் அந்த எம். பி. தெரிவித்தார்.

இதேவேளை இது குறித்து

(4-ம் பக்கம் பார்க்க)

## தயான் ஜெயதிலக கட்சியிலிருந்து இடைநிறுத்தம்

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் திரு. தயான் ஜெயதிலக, ஸ்ரீலங்கா மஹாஜன கட்சியிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

ஐ. தே. க. அதிருப்தியாளர்கள் மீது குறிப்பாக காமினி, லலித் மீது கடும் குற்றச்சாட்டுக்களை சுமத்தி பெரும் சர்ச்

(4ம் பக்கம் பார்க்க)

## சதித்திட்டம் பற்றி ஜனாதிபதி அம்பலப்படுத்துவார்

(கொழும்பு)
நாட்டு மக்களுக்கு எதிரான சதித்திட்டம் பற்றி ஜனாதிபதி அம்பலப்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கண்டியில் 18 ஆம், 19-ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கூட்டத்தை வெற்றி விழாவாகக் கொண்டாட ஏற்பாடு

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### A/L இரசாயனம்

A/L 93 இரசாயனம் ஆரம்பம் 15-10-91. செவ்வாய் 4-30 p m. சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. ஆசிரியர்: சத்தியன், 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (இ 5476)

### வாழ்த்து மடல்கள்

வந்துவிட்டன! வாழ்த்து மடல்கள்!! தித்திக்கும் தீபாவளி வாழ்த்து மடல்களை எத்திக்கும் வாங்கி அனுப்பிடஇன்றே விஜயம் செய்யுங்கள்: சோபிதா, 363, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (இ 5453)

### வைத்திய நிலையம்

புளியங்கூடல் சந்தியில் சேவையாற்றிய நடனமுருகன் வைத்திய நிலையம் தற்காலிகமாக யாழ்ப்பாணம் சத்திரச் சந்தி கொட்டடி றோட்டில் இயங்கிவருகின்றது. டாக்டர் கந்தையா நவரத்தினம். தலைமை நிலையம்: வேலணைத் துறையில் டாக்டர் ஐயம்பிள்ளை கந்தையா. (இ-5455)

### வெள்ளி மகாதெசை

பிரேமதாசாவின் வெள்ளி தெசை ஆயுட்கால ஜனாதிபதியாக்கும் ஏழரைச்சனி நெருக்கடிகள் மத்தியிலும்; வெள்ளியால் மேலும் ஜனாதிபதியின் கைமேலோங்கும். செவ்வாய் வியாழ மாற்றங்களுக்கு: சோபிதா, யாழ்ப்பாணம். நூலாசிரியர்: சத்தியதாஸன். (இ-5458)

### அடையாளம் காணப்பட்ட சடலம்

(புலோலி)

நாகர்கோவில் காட்டுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட வயோதிபரின் சடலம் அடையாளம் காணப்பட்டது.

புலோலி தெற்கு காந்தி பூரைச் சேர்ந்த ஆ. வல்லிபுரம் என்பவரின் சடலம் என அடையாளம் காணப்பட்டது. (61)

### வெள்ளை பிரம்பு தினம்

(யாழ்ப்பாணம்)

கண்பார்வை அற்றோர் சர்வதேச வெள்ளைப் பிரம்புத் தினம், இம்மாதம் 15ம் திகதி உலகெங்கும் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

அன்றைய தினம் நல்லூர் செங்குந்தா இந்துக் கல்லூரியில், லயன்ஸ் கழகத்தினர் கண்பார்வை அற்றோருக்கு வெள்ளைப் பிரம்புகளை அன்பளிப்புச் செய்வார்கள். (வி)


**NEW MASTER INSTITUTE**
JAFFNA.

**93 A/L**

★ (விஞ்ஞான பாடங்கள் மட்டும்)

ஆரம்பம்:
19-10-1991
(சனி காலை 7 மணி)

★ எமது வழமையான ஆசிரியர் குழுவினுள்

★ தாமதிக்காது உங்கள் இடத்தை உறுதி செய்து கொள்ளவும்:

(ஏ-1641)


## புதிய பொறுப்பு

(கொழும்பு)

பிரதமர் திரு டி. பி. விஜயதுங்கா தொழிலாளர் பயிற்சி அமைச்சராக அண்மையில் ஜனாதிபதி திரு பிரேமதாசா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

## முதலுதவி தினம்

(யாழ்ப்பாணம்)

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி தினம், இம்மாதம் 21ம் திகதி கன்னாதிட்டி ஸ்தீரவரோதயாக் கல்லூரியில் கொண்டாடப்படவுள்ளது. (வி)




# பாராட்டு விழா

இடம்: நல்லூர், பண்டாரக்குளம் விநாயகர் ஆலய இசையரங்கு மண்டபம்.

திகதி: 13-10-91 ஞாயிற்றுக்கிழமை (பி. ப. 3 00 மணி)

தலைவர்: திரு. க. சொக்கலிங்கம் M. A. (சொக்கன்) அவர்கள்

பாராட்டுப் பெறுவோர்:

1. சங்கீத கலாவித்தகர்
**செல்வன் பா. கண்ணன்**

2. மிருதங்க கலாவித்தகர்
**செல்வன் க. கண்ணதாசன்**

இன்னிசைக்கச்சேரி:

சங்கீத பூஷணம் திரு. எஸ். கணபதிப்பிள்ளை அவர்கள், ஆதரவாளர்கள், கலைஞர் பெருமக்கள் ஆகிய எல்லோரையும் சமுகந்தருமாறு அன்போடு அழைக்கின்றோம்.

குறிப்பு: 17-10-91 வியாழக்கிழமை மாலை 4-00 மணியளவில் விஜயதசமிப் பூசை வழிபாடும், இசை வகுப்புகள் ஆரம்பமாவதும் இடம்பெறும். புதியவர்கள் சேர்ந்துகொள்ளலாம்.

இங்ஙனம்
ச. பாலசிங்கம், அ. நமசிவாயம்
(இணைக்காரியதரிசிகள்)

(இ-5475)



## ஓராண்டு நினைவஞ்சலி



**கந்தையா கணபதிப்பிள்ளை**

(கிணற்றடிச் சின்னத்தம்பி)

(பிரபல விவசாயி)

தோற்றம்: 10-07-1932 (நெடுந்தீவு).
மறைவு: 25-09-1990 (இராமநாதபுரம்).
திதி: 13-10-1991.

உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும்.

தேடினோம்; வாடி நிதம் அழுகின்றோம்;
மறப்போமா உங்களை எம்முயிர் உள்ளவரை.
ஓராண்டு கடந்தாலும் உம் நினைவுகளால்
நித்தம் நித்தம் நினைந்துருகுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

7ம் யூனிற், இல: 707.
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

(சி 5470)


# படையினருக்கு வீடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் பலத்த காயமடைந்த, அங்கவீனமுற்ற படையினருக்கு 25 பேருக்கு சம்பஹாவிலுள்ள உடப்பிலவில் இராணுவத் தளபதி லெ. ஜெனரல் ஹமில்ரன் வணசிங்க வால் கடந்த 10-ஆம் திகதி வீடுகள் வழங்கப்பட்டன. (158)

**இராசி பலன்**

ஞாயிற்றுக்கிழமை
13-10-1991
தமிழுக்கு புரட்டாதி 27

ஷஷ்டிமுழுவதும்; கேட்டை மரணயோகம் பி. ப. 3-30 வரை: இராகுகாலம் மாலை 4-32 முதல் 6-02 வரை சுபநேரம் காலை 9-02 முதல் 10-32 வரை, ஷஷ்டி விரதம்.

மேடம்: கடும்பகை, அவதானக்குறைவு, அகாலபோஜனம்.

இடபம்: வயிற்றுவலி, அமைதியின்மை, தொழில் கேடு.

மிதுனம்: குடும்ப மகிழ்ச்சி, தொழில் சிறப்பு, தானதர்மம்.

கடகம்: வாக்கு வன்மை, இனசனஉதவி, பணவரவு.

சிங்கம்: குடும்ப தொல்லை, பெண்பகை, காரியதடை.

கன்னி; போட்டி, வைராக்கியம், பணவிரயம், கவலை மிகுதி.

துலாம்; சகோதர பாசம், மனச்சிறப்பு, உல்லாசம்.

விருச்சிகம்; பொதுப்பணி, புத்திரர் கவலை, ஆயாசம்.

தனுசு: தொழில் மந்தம், குடும்பகலகம், ஆராய்ச்சி

மகரம்; தனிமைப்படல், தொழில் தகராறு, அலைச்சல்.

கும்பம்; எதிர்பாராத செல்வம், பணியாள் உதவி, வெற்றி

மீனம்; புதியதிட்டம், மனத்திரை, கன்னியம்.

ஜோதிடர்

## கலை, பண்பாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் கோ மகேந்திரராசா தமிழீழ விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தினரால் வெளியிடப்பட்ட 'வெளிச்சம்' கலை இலக்கிய சஞ்சிகை வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: கலை, பண்பாடு என்பன ஒரு தேசிய இனத்தின் முதுகெலும்பு, ஒரு இனத்தின் வாழ்வும் வளர்ச்சியும் அந்த இனத்தின் கலை, பண்பாடுகளில்தான் தங்கியுள்ளது.

ஒரு இனத்தை ஒரு பேரினவாத சக்தி அடக்க, பிறிதொரு நாடு ஒரு நாட்டை அடக்க முற்படும் போது அடக்கப்பட்ட இனத்தின் கலை, பண்பாட்டைச் சிதைக்க முயன்றார்கள்; அது பிரதான குறியாகவும் இருக்கும்.

சிங்களப்பேரினவாதம் தமது பலத்தை பலவீனத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறார்கள். அந்நியர்கூட இதையே பயன்படுத்தினார்கள்.

இலக்கிய கர்த்தாக்களை அரவணைக்கு முகமாகவும், போராட்டத்தில் இணைக்கு முகமாகவும் 'வெளிச்சம்' வெளியிடப்படுகின்றது.

இதுவரை காலமும் அடிமைப்பட்டுஆக்கிரமிப்பு நடந்தபடியால் கலை இலக்கியத்தில் ஒரு இடைவெளியிருக்கிறது. இத்தகைய வெளியீடுகளுக்கூடாக கலை இலக்கிய கர்த்தாக்களைப் பாற்றுவதன் மூலம் நிறைவுசெய்யலாம்" என்றார். (152)


## 90-ம் நாள் நினைவஞ்சலி



மணலாற்றில் நடைபெற்ற நேரடி மோதலில்
வீர மரணமடைந்த
**வீரவேங்கை**
**தியாகலிங்கம் (குட்டி)**
(நாகலிங்கம் ஜெயலிங்கம்)

| வீரஜெனனம்: | வீரமரணம்: |
|---|---|
| 15 - 05 - 1972 | 16 - 07 - 1991 |

தமிழனின் விலங்கு தனை உடைத்து
தாயக மண்ணை மீட்டிட வேண்டும் என்ற ஆவல் தனில்
பள்ளிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு
பாதகர்களாம் இனவெறி அரச படைகளை
எம் மண்ணை விட்டு அரத்த முற்பட்டசெய்
இறுதியில் தமிழீழ மண்ணை முத்தமிட்டுக் கொண்டாய்.

நன்றி.

உமது பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதரர்.

மூளாய் தெற்கு,
சுளிபுரம்.

[5477]

## நாதஸ்வர மேதை
## என். கே. பத்மநாதன் அவர்களின்
# மணிவிழா சிறப்பு மலர்



# அறுபதாம் வயதில் அரசோச்சும் கலைஞன்

அக்காலத்தில் இந்தியாவிலிருந்து கோயில் திருவிழாக்களுக்கு வருகைதரும் பழம்பெரும் வித்துவான்களும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற வித்துவான்களும் நாதஸ்வரம் வாசிப்பார்கள். இவர்களுள் யாழ்ப்பாணத்திலுள்ள வித்துவான்கள் பலர் இந்திய வித்துவான்களுக்கு ஈடாக வாசிப்பதையும் சில சமயங்களில் அவர்களை மிஞ்சிவிடக்கூடியவாறு வாசிப்பதையும் காணக்கூடியதாயிருக்கும்.

இவர்களுள் இளம் நாதஸ்வர வித்துவான்கள் ஒருசிலருடன் சென்று பேசி அவர்களுடன் நட்புக் கொள்ள வேண்டுமென்னும் ஆவல் எனக்கு ஏற்பட்டது. அத்தகைய இளம் வித்துவான்களுள் கலாநிதி என். கே. பத்மநாதன் அவர்களும் ஒருவராவார்.

பல கச்சேரிகளிலும் அடிக்கடி என்னைக் காண்பதாலேற்பட்ட ஒருவித அறிமுகத்தினால் என்னைக் கண்டால் அர்த்தமுள்ள ஒரு புன்னகையுடன் நிறுத்திக் கொள்வார் பத்மநாதன் அவர்கள்.

1956ஆம் ஆண்டு நான் பதுளையில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது பதுளை கதிரேசன் கோயில் உற்சவமொன்றுக்கு ஊர்வலத்துக்கு நாதஸ்வரம் வாசிக்க திரு. பத்மநாதனும் மறைந்த நாதஸ்வர வித்துவான் என். ஆர். கோவிந்தசாமியும் வந்திருந்தார்கள். பதுளை நகர மத்தியிலுள்ள மணிக்கூண்டுக் கோபுரத்தினருகே அமைந்த மேடையில் இவர்கள் இருவரையும் உட்கார்ந்து கச்சேரி செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஏறத்தாழ ஐந்து மணித்தியாலங்கள்வரை இவர்களது கச்சேரி நடைபெற்றது.

அன்றைய கச்சேரியின் போதுதான் திரு. பத்மநாதனின் திறமை எந்த கையது என்பதை எல்லோரும் அறிந்து கொள்ள முடிந்தது. ஒரு மேதை உருவாகிக்கொண்டிருக்கிறார் என்பது புலனாயிற்று. சற்று நெருக்கமாகச் சென்று பேசினேன். அவர் மகிழ்ச்சியுடன் என்னை வரவேற்றார்.

மீண்டும் 1965ஆம் ஆண்டு நான் இரத்தினபுரியில் கடமையாற்றும்போது ஒரு அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. சங்கீதபூஷணம் பொன். சுந்தரலிங்கத்தின் மைத்துனர் திரு. கனகரத்தினம் வீட்டில் நான் தங்கியிருந்தேன். இரத்தினபுரி சிவன்கோயில் உற்சவத்துக்கு திரு. பத்மநாதனை அழைப்பதென முடிவு செய்து அவரை அழைத்தோம். அங்கு அவர் வாசித்த கச்சேரி மிகப் பிரமாதமாக அமைந்தது. ஒன்பது ஆண்டு இடைவெளிக்குப்பின் பத்மநாதன் இசைத்திறன் ஒன்பது மடங்கு உயர்ந்து நின்றது.

ஒரு மேதை உருவாகிவிட்டார் என்பது நிச்சயமாகிவிட்டது. இந்தக் கச்சேரியின்பின் ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் அவரது மேதாவிலாசம் உலகுக்கு எட்டியது. ஈழத்தின் நாதஸ்வர வரலாற்றில் ஒரு பொன்னெழுத்துப் பொறிக்கப்பட்டது. நாதஸ்வர மேதை பத்மநாதன் சென்னை மியூசிக் அகடெமியின் இசைவிழாவிற் பங்குபற்ற அழைக்கப்பட்டார். அவருக்கு முன்போ அவருக்குப்பின் இதுவரையிலோ ஈழத்து நாதஸ்வரக் கலைஞர் எவரும் மியூசிக் அகடெமி இசைவிழாவிற் பங்குபற்ற அழைக்கப்படவில்லை.

1980 மார்ச் 31ந் திகதி எனது கணிப்பின் பிரகாரம் அவருக்கு ஒரு பொன்னாள் என்று கூறுவேன். அன்று வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம். மாலை பத்மநாதன் கச்சேரி. அன்று அவரும் கேதீஸ்வரனும் சக்கைப்போடு போட்டார்கள். கொழும்பு மாநகரமே நாதவெள்ளத்தில் மூழ்கியது.

ஒரு மேதை அதிமேதையாக உருவாகிவிட்டார்.

இதன்பின் ஒரு குறுகியகால இடைவெளிக்குள் இலங்கை ஜனாதிபதியின் மிக உயர்ந்த விருதான ''கலாசூரி'' விருது பத்மநாதனுக்கு அளிக்கப்பட்டது.

இந்த விருதைப் பெற்ற முதலாவது இசைக் கலைஞராகவும் முதலாவது நாதஸ்வரக் கலைஞராகவும் பெருமை பெற்றவர் பத்மநாதன் அவர்கள்.

இன்று அறுபதாவது ஆண்டைப் பூர்த்தி செய்த ஒரு முதிர்ந்த இளைஞனாகவும், ஒரு முதிர்ந்த கலைஞனாகவும் திகழும் திரு. பத்மநாதனின் சிறப்புகளுக்கு வித்திட்ட மேதைகள் மாவிட்டபுரம் கே. எஸ். இராசா, பி. எஸ். ஆறுமுகம் பிள்ளை, எம். பி. எம். திருநாவுக்கரசு, திருச்சேறை கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நன்றியுடன் நினைவுகூரப்பட வேண்டியோராவர்.

**- நவாலியூர் நா. சச்சிதானந்தன் -**

## வாழ்க்கைக் குறிப்புகள்

பெற்றோர்; என். கந்தசாமி பரிமளம்.

பிறப்பு: 1931 - 09 - 20

குருமார்: தந்தையார் என். கந்தசாமி, எஸ். கந்தசாமி, சீர்காழி எஸ். பி. எம் திருநாவுக்கரசுபிள்ளை டி. கிருஷ்ணமூர்த்திபிள்ளை மாவிட்டபுரம் இராசா பி. எஸ். ஆறுமுகம் பிள்ளை.

திருமணம்: 18 - 01 - 1957

மனைவி: நாகேஸ்வரி

பட்டங்கள்: நாதஸ்வர கானகலாநிதி, ஏழிசைவாரிதி, கலாசூரியா, ஏகச்சக்கராதிபதி

குழந்தைகள்; 7 பேர்

சென்ற நாடுகள்; லண்டன், பாரீஸ், சிங்கப்பூர், மலேசியா, இந்தியா.

வாசித்த முக்கிய கச்சேரிகள்: மியூஸிக் அக்கடமி, லண்டன் தொலைக்காட்சி, 2-வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, மதுரை.

சேர்ந்து வாசித்த பிரபல்ய வித்துவான்கள்: வலங்கைமான் சண்முகசுந்தரம், நாச்சிமார் கோயில் இராஜப் பிள்ளை. தெட்சணாமூர்த்தி, சின்னராசா, கே. கணேசபிள்ளை.

ஆஸ்தான வித்துவான்: நல்லூர் முருகன் தேவஸ்தானம்

## நாடுசெய்த தவப் பயனாக கிடைத்த தெய்வீகக் கலைஞர்

மணிவிழா நாயகர் திரு. என். கே. பத்மநாதன் அவர்களையும் துணைவியாரையும் மனமார வாழ்த்துவதில் எமது தேவஸ்தானம் பெருமகிழ்ச்சி அடைகிறது. நாதஸ்வரக் கலாநிதி என்றும், கலாசூரி என்றும், நாதஸ்வரமேதை என்றும் தமிழுலகம் பாராட்டும் சிறப்பு திரு. "என். கே. ப" அவர்களுக்கு உண்டு.

இந்த நாடு செய்த தவப்பயனாக எமக்குக் கிடைத்த தெய்வீகக் கலைஞர் இவர். இப் பெரியாரின் வாழ்வு தெய்வீகமான கலைத் தொண்டில் மூழ்கித் மலர்ந்து கனிந்துள்ளது. ஆகவே இவர்களின் கலைத்தொண்டையும், தெய்வீக உள்ளத்தையும், பண்பாட்டுச் சிறப்பையும் இந்நேரத்தில் வாழ்த்தி நிற்பதோடு துர்க்கா தேவியையும் பிரார்த்தித்து அமைகின்றேன்.

- சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

## பத்மநாதன் நீடுவாழியவே

நாத சுரத்திற் கொருபத்ம நாதனென்றே யுரைக்கும்
நாத துணைவி யுடனுண் டறுபதை நாடியின்று
நாத வருவிற்றொரு ருவிபுனைந்து மணமயர்வாய்
நாத வருளென ஓங்குக ஓங்குக ஓங்குகவே.

இசையரசன் இறைவனே ஆராதிக் கும்பணி ஏற்றுநின்றே
இசையால் உலகம் புகழ்ந்து விருதுகள் எங்கும் தந்த
இசையாளன் பத்ம நாதன் கண்டு துணைவியுடன்
இசைஆர் மணிவிழாக் காணுகின்றான் நீடு வாழியவே

இந்தியா சிங்கப்பூர் லண்டன் வரைசென் றிசைதிறமை
அந்தநல் நாட்டினர் ஆர அளித்தாய் இசையமுதம்
சிந்தையில் என்றும் அகங்காரங் கண்டறி யாதுசெல்வ
சந்தத முப்புகழ் ஓங்கிட வாழிய வாழியவே

அரசன் திறமை யறிந்து கலாசூரி யென்றுபட்டம்
தரவது கேட்டு மகிழ்ந்து நின் றோம்பல நல் மெடலி
விரவும் குழற்பத்ம நாத விமலன் திருவடியைப்
பரவுகின் றோம்பதி னாறெனும் பேறுகள் பாலிக்கவே

பகலாபிரவர் மகிழவைத் தாய்பத்ம நாதனென
எல்லா இதயங் களும் மகிழ்ந் தேதுள்ளும் இத்தினத்தில்
நல்லோர் அளித்திடும் ஆசிகள் மேலும் வளம் பெருக
நல்லூர் முருகன் கழலடி போற்றும் வாழியவே.

வித்துவான் குமாரசுவாமி

நாதஸ்வரமேதை என். கே. பத்மநாதன்
அவர்களின்
மணிவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்!

# கரன் வர்த்தக ஸ்தாபனம்

764, கே. கே. எஸ். றோட், தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

# தயார் நிலையில் இருக்குமாறு இந்திய படைக்கு எச்சரிக்கை

[சென்னை]

இந்திய கடற்படையினர் விழிப்புடனும் எந்த நேரத்திலும் தயார் நிலையில் இருக்க வேண்டுமென்று இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் எல். இராம்தாஸ் இரண்டு நாள் பயணமாக சென்னைவந்திருந்த போது கடற்படை தளத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இதேவேளை மாநிலத்திலுள்ள பதினொரு கடலோர மாவட்டங்களில் கடலோர கண்காணிப்பு மையங்கள் அமைக்கப்படவுள்ளதாக மாநில சட்டம் ஒழுங்கு அமுல் பிரிவின் தலைமை காவல் ஆய்வாளர் தேவாரம் தெரிவித்துள்ளார்.

தமிழககாவற்படையிலுள்ள 8000 காவலர்களை அதிரடி படையினராக மாற்றுவதற்கு மத்திய அரசு உதவியுடன் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் 500பேருக்கு ஏற்கனவேபயிற்சி அளிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். (மா)

## முதுபெரும் எழுத்தாளர்களுக்கு 10,000 ரூபா பணப்பரிசு

[யாழ்ப்பாணம்]

எழுத்தாளர் அ. செ. முருகானந்தனும், அல்வைக் கவிஞர் ஆறுமுகமும் நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 'வெளிச்சம்' கலை இலக்கிய சஞ்சிகை வெளியீட்டு விழாவின்போது ரூபா 10 000 பணப்பரிசில் வழங்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தப் பணப் பரிசை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு வே. மகேந்திரராசா வழங்கினார். [152]

## 25 ஜே.வி.பியினர் தெற்கில் கைது

(கொழும்பு)

தென்னிலங்கையில் 25 ஜே. வி. பி. உறுப்பினர்கள் ஆயுதங்கள், வெடிமருந்துகளுடன் கைது செய்யப்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தலவன்வில, குடாஓயா, அம்பாந்தோட்ட, வீரக்கெட்டிய, புளஸ்மிலை, வெலியத்த ஆகிய பகுதிகளிலே இவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

தன்னியக்கத் துப்பாக்கிகள், தோட்டாக்கள், கைக்குண்டுகள். வெடிமருந்துகள், வானொலிகள், கைக்கடிகாரங்கள் போன்ற பல பொருள்கள் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டவையாகும்.

## இலங்கையுடன் இந்தியா சமாதானமாக போகும்

[கொழும்பு]

விடுதலைப்புலிகளுக்கு ஜனாதிபதி ஆயுதம் வழங்கியதாக கூறப்படும் குற்றச்சாட்டில் இலங்கையுடன் இந்தியா சமாதானமாக போகக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்தக்குற்றச்சாட்டு இதுவரை எந்த விதத்திலும் நிரூபிக்கப்படாததால் இதுகுறித்து இந்தியா மேலதிக விளக்கம் எதனையும் கோரமாட்டாதெனவும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

அண்மையில் இந்தியப் பிரதமரும் இதுபற்றி பூரண விபரம் எதுவும் கிடைக்காததால் எதுவும் செய்யமுடியாதெனக் கூறியதும் குறிப்பிடத்தக்கது.

## வலைபந்தாட்ட போட்டி

[யாழ்ப்பாணம்]

மேஜர் அன்ரனி ஞாபகார்த்தமாக ஈச்சமோட்டை சனசமூக நிலையம் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்துவுள்ள வலைபந்தாட்டப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

இன்றைய ஆரம்ப வைபவத்துக்கு, யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திரு. எஸ். அன்னுதுரை பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார்: திருமதி அன்னுதுரை விளையாட்டு வீராங்கனைகளுக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுவார். ஆரம்ப வைபவத்துக்கான சகல ஏற்பாடுகளையும் திரு. டி. ஏ. எம். குணசிங்கம் மேற்கொண்டுள்ளார். [வி]

## மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ப. நோ. கூ சங்கம் பங்கீட்டு அட்டைக்கு 1 போத்தல் மண்ணெண்ணை 30 ரூபா வீதம் நேற்றுமுதல் வழங்கி வருகிறது

## மணி விழா நாளை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

நாதஸ்வரமேதை திரு. என். கே. பத்மநாதனின் மணி விழா நல்லை. ஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நாளை 14-ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 16-ம் திகதி வரை நடைபெறும். தினமும் மாலை கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

## தமிழ்க் கிராமங்களில் தொடர் தேடுதல் வேட்டை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ்க் கிராமங்களில் ஸ்ரீலங்கா விசேட அதிரடிப் பொலிஸாரினால் தொடர்ச்சியான தேடுதல் வேட்டை நடாத்தப்பட்டு வருகிறது

இத்தேடுதலின்போது தமிழ் மக்கள் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டு வருவதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அக்கரைப்பற்று, தம்பிலுவில், திருக்கோவில், கோமாரி ஆகிய இடங்களே அதிரடிப் படையினரின் திடீர் தேடுதல் வேட்டைக்கு இலக்காகும் கிராமங்களாகும்.

இதேவேளை இப்பகுதியில் மேலும் பல விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு வருகிறார்கள்.

இத்தேடுதலின்போது கைது செய்யப்பட்டவர்களில் இளவயதினர் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

### வடக்கு-கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டி எழுப்பக்கூடிய நல்ல பணியை இராணுவத்தினரிடமிருந்து எதிர்பார்க்கிறேன். வடக்கிலும், கிழக்கிலும் தொடரும் அனாவசிய யுத்தம் விரைவில் முடிவுக்குகொண்டு வரப்படவேண்டும்'' என்றார்.

### லலித்-காமினி -

1-ம் பக்கத் தொடர்ச்சி]

இவர்களையும் இவர்களது அணியை சேர்ந்தவர்களையும் அழிப்பதற்கான முயற்சிநடைபெற்றுவருவதாகவும் தங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து லலித், காமினி உட்பட சம்பந்தப்பட்டவர்களை அமைச்சு எச்சரித்துள்ளது. (சி-153)

### தயான்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சையை ஏற்படுத்தியதை படுத்து கட்சித்தலைமைப்பீடம் திரு. தயான் ஜயதிலகவையும் மற்றும் முக்கிய இருதலைவர்களையும் கட்சியிலிருந்து இடைநிறுத்தியுள்ளதாக கட்சியின் பொதுச்செயலர் திரு. வை. பி. டி. சில்வா தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு பிரச்னையை லலித்தும், காமினியும் மிக மோசமடையச்செய்வதாகவும் இவர் குற்றம் சாட்டியிருந்தார். [சி]

### சபாநாயகர் மீது

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஐ. தே. க. வினர் சபாநாயகர் மீது சந்தேகம் கொண்டிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி-153)

### நம்பிக்கையில்லாப்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதன்மூலம் அதிருப்தியாளர்கள் வெல்லக்கூடிய சாத்தியம் ஏற்படலாமெனவும் அரசு பயப்படுவதால் சபாநாயகரை ராஜினாமாசெய்ய வேண்டாமென அரசு கோரி வருகிறதாம். [சி-153]

### சுப்பிறீம் கோட்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாயகருக்கு அறிவிக்கப்படவில்லையென்றும் 'வழக்கறிஞர் சங்கம்' தமது வழக்கில் குறிப்பிட்டுள்ளது.

சபாநாயகரின் செயல் இலங்கை அரசியல் சட்ட விதிகளுக்குப் புறம்பானது எனவும் இந்தச் சக்தி வாய்ந்த வழக்கறிஞர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்தவழக்கை விசாரணைக்கு எடுப்பதா இல்லையா என சுப்ரீம்கோட் விரைவில் முடிவு செய்யவுள்ளதாம். [சி]

### 2000 படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்தவருடம் ஜூன்மாதம் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் யுத்தம் ஆரம்பமான காலத்திலிருந்து இதுவரை காலமுமே இந்தத் தொகை படையினர் கொல்லப்பட்டும், படுகாயமடைந்துமுள்ளதாக அவர் மதிப்பிட்டுள்ளார். (153)

### ஓராண்டு பூர்த்தி

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரிலிருந்து வெளிவரும் 'கொட் ஸ்பிறிங்' ஆங்கிலப் பத்திரிகை ஓராண்டை பூர்த்தி செய்து இன்று 2-வது ஆண்டு முதலாவது இதழ் வெளியாகிறது' [வி]

### கறுப்பு பூனைகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலதிக பாதுகாப்புப் பிரிவு அனுப்பப்படவுள்ளன.

இதேபோன்றே ஏனைய நாட்டுத் தலைவர்களதும் பாதுகாப்பு அமையுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

### சதித்திட்டம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போதே ஜனாதிபதி இச்சதித் திட்டம் பற்றி அம்பலப்படுத்துவாராம். [சி]

### தீவுப்பகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேற்படி தீவுகளில் இராணுவத்தினர் கடந்தசில நாட்களாக பெருமளவில் தரையிறக்கப்பட்டுள்ளதாகவும் இப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் இராணுவத்தினரால்துன்புறுத்தப்படுவதுடன் பலர்கைது செய்யப்படுவதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. [வி]

### புலிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிலும் அரசியல் ரீதியிலும் பெரும் நெருக்கடியைக் கொடுத்து வருகின்றபோதும் புலிகள் இவற்றை எதிர்கொண்டு சமாளித்து வருகிறார்களாம்.

புலிகளுக்கு மேற்குலக நாடுகள் பலவற்றின் ஆதரவு இருப்பதாகவும் அடுத்துவரும் வருடங்களில் புலிகளின் நடவடிக்கைகள் இலங்கைக்கு பெரும் அச்சுறுத்தலாயிருக்குமென்றும் அச்செய்தி தெரிவித்துள்ளது. (சி)

## மரண அறிவித்தல்

### திருமதி பாலாம்பிகை மகேந்திரா

யாழ்ப்பாணம் 'மகேந்திரா' இல. 6, மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த திருமதி பாலாம்பிகை மகேந்திரா காலமானார். அன்னார் சந்தரோடையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி வீரவாகு சோமசுந்தரத்தின் மூத்த மகளும், இளைப்பாறிய இலங்கை வங்கி சிறுப்பர் காலஞ்சென்ற திரு. துரைச்சுவாமி மகேந்திராவின் அன்பு மனைவியும், குலேந்திரா, குகேந்திரா, உதிதமிப்பிள்ளை ஆகியோரின் அன்புத்தாயாரும், சியாமளா, சுமதி, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மீரா, சுபர்தினி, கலையானந்தி, சொரூபானந்தி, சோபானந்தி ஆகியோரின் பாட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் 13-10-1991 (இன்று) ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இராச இராஜேஸ்வரன் தங்கராசா

(சி-5479)


## உதயம் இசைநாடா வெளியீடு

எமது நிதர்சனம் நிறுவனத்தின் எட்டாவது தயாரிப்பான உதயம் இசைநாடா வெளியீடும் அதனைத் தொடர்ந்து அதே கலைஞர்களால் இசைக்கப்படும் இசை நிகழ்ச்சியும் இடம் பெறும்:

★ யாழ், இந்துக்கல்லூரி

★ 1991-10-13 இன்று ஞாயிறு

★ காலை 10 மணிக்கு

குறித்த நேரத்தில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்

நிதர்சனம்

தமிழீழம்

(எ 1652)


இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்டோபர் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Postoffice Lanka under licence Number D/10836/81